**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.119** **நாள் : 22.08.2019**

**சென்னை மாநகரை பிரான்ஸ் நாட்டின் கிளாரமோண்ட் ஃபெராண்ட் நகரத்துடன் இணைந்து நீடித்த நிலையான நகரமாக கட்டமைக்க ஐரோப்பிய ஒன்றிய சர்வதேச நகர கூட்டமைப்புடன் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

இந்திய மற்றும் ஐரோப்பிய நாடுகள் இணைந்து 50 ஆண்டுகளுக்கும் மேலாக வறுமை ஒழிப்பு, பேரிடர் தடுப்பு, வர்த்தக விரிவாக்கம், எரிசக்தி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்ற இருநாடுகளுக்கும் நன்மை தரும் துறைகளில் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

ஐரோப்பிய ஒன்றியமானது 28 நாடுகளை உள்ளடக்கிய மிகப்பெரிய பொருளாதாரத்தை கொண்ட கூட்டமைப்பாகும். இது சீனா, இந்தியாவிற்கு அடுத்து மக்கள்தொகை அதிகம் கொண்ட கூட்டமைப்பாகும். ஐரோப்பிய கூட்டமைப்பு பல்வேறு மாறுபட்ட நாடுகளை கொண்டிருந்தாலும், அடிப்படையில் அமைதி, ஜனநாயகம், சட்ட விதிகள் மற்றும் மனித உரிமைகளை பேணிக்காப்பதில் உறுதி பூண்டுள்ளன. இதன்மூலம் ஐரோப்பிய ஒன்றியங்களில் உள்ள நாடுகள் இணைந்து ஜனநாயக ரீதியில் முடிவுகளை எடுக்க இயலும். இக்கூட்டமைப்பு 19 உறுப்பு நாடுகளை கொண்ட ஒற்றை சந்தை மற்றும் பொதுவான பணமதிப்பின் மூலம் அதிக அளவில் வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கி நீடித்த நிலையான வளர்ச்சி கொள்கையில் முன்னிலை வகிக்கிறது.

**பிரான்ஸ் நாட்டின் கிளாரமோண்ட் ஃபெராண்ட் நகரத்துடன் இணைந்து சென்னை மாநகரை நீடித்த நிலையான நகரமாக கட்டமைக்க ஐரோப்பிய ஒன்றிய சர்வதேச நகர கூட்டமைப்புடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக ஆணையாளர்/சிறப்பு அலுவலர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களும், இந்தியாவிற்கான ஐரோப்பிய கூட்டமைப்பின் ஆலோசகர் (சுற்றுச்சூழல், தட்பவெப்பநிலை, எரிசக்தி) திருமதி ஹென்ரீட்டி ஃபேர்ஜிமேன் அவர்களும் 21.08.2019 அன்று ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கையொப்பமிட்டனர்.**

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இரு நகரங்களுக்கிடையே ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களில் ஒத்துழைப்பை வழங்கவும், அறிவுசார் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், ஒரு செயல்திட்டம் உருவாக்கப்படும். இதன்மூலம் சீர்மிகு நகரத் திட்டப் பணிகளை சர்வதேச செயல்பாட்டு முறையுடன் மேற்கொண்டு சென்னை மாநகரத்திற்கு நீடித்த நிலையான வளர்ச்சியினை ஏற்படுத்த இயலும்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் இந்த நடவடிக்கை மிகவும் திருப்திகரமான நடவடிக்கை என்றும், சென்னை மற்றும்

கிளாரமோண்ட் ஃபெரொண்ட் நகரங்களின் உடன்படிக்கையின் செயல்பாட்டு முறைகள் சென்னை மாநகரத்திற்கு மட்டுமின்றி தமிழ்நாட்டின் இதர மாநகரங்களுக்கும், அண்டை மாநிலங்களின் பிற நகரங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்துள்ளார். மேலும், உலகளவிலான கூட்டு முயற்சிகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்கள் சிறந்த நகரத் திட்டமிடலுக்கான முக்கிய காரணியாகும் எனவும், இதில், சென்னை மாநகரம் முன்னோடியாக விளங்குகிறது. மேலும், இந்த கூட்டு உடன்படிக்கையின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளினால் சென்னை மாநகரம் மேலும் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான ஐரோப்பிய ஒன்றிய ஆலோசகர் (சுற்றுச்சூழல், தட்பவெப்பநிலை மற்றும் எரிசக்தி) திருமதி ஹென்ரீட்டி ஃபேர்ஜிமேன் அவர்கள் சர்வதேச நகர கூட்டமைப்பில் சென்னை மாநகரையும் ஒரு நகரமாக இணைப்பதில் பெருமகிழ்ச்சி அடைவதாகவும், சென்னை மற்றும் கிளார்மோண்ட் ஃபெரொண்ட் நகரத்திற்கான கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்தவும், சீர்மிகு நகரத் திட்டப்பணிகளை செயல்படுத்த முக்கியத்துவம் அளிப்பதாகவும், தொழில்நுட்ப பரிமாற்றங்களை செய்வதன் மூலம் திடமான பயன்களை அடைய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நகரங்கள் மற்றும் இந்திய, வட, தென் அமெரிக்க நகரங்களுக்கிடையே நீடித்த நிலையான நகர வளர்ச்சிக்கான ஒத்துழைப்பை அதிகரிப்பதே சர்வதேச நகர கூட்டமைப்பின் முக்கிய நோக்கமாகும். நிலையான நகர வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு நிதியுதவிகள் ஐரோப்பிய ஒன்றியங்களால் வழங்கப்பட்டு, ஜி.எஃப்.ஏ. மற்றும் கிரைசில் கூட்டமைப்பினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் மாநகர பிரதிநிதிகளை தொடர்பு கொண்டு நிலையான நகர வளர்ச்சி திட்டங்களுக்கான தீர்வுகளை பெறலாம். ஐரோப்பிய கூட்டமைப்பு மற்றும் இந்திய மாநகரங்கள் பொதுவான முன்னுரிமைகள் மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்களின் அடிப்படையில் ஒத்துழைப்பை மேற்கொண்டு அறிவுசார் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்ள உள்ளனர். இரண்டு மாநகரங்களின் பிரதிநிதிகள் மற்ற நகரங்களின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களை பார்வையிட்டு, செயல்திட்டத்தை உருவாக்கி நீடித்த நிலையான நகர வளர்ச்சியினை அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (மழைநீர் வடிகால்) திரு.எல்.நந்தகுமார் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியிடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**